

ARUWE

INM-Chennai

# சிறுவர் அரங்கம்

குழந்தைகளின் திறனுக்கான ஒரு தளம்

இதழ் - 7 2020 - 2021

## இருப்பதை வைத்து மகிழ்ந்திருப்போம்...


பகிர்வில்
மகிழ்வோம்
20.12.20







# அன்னையின் வாழ்த்து



Sr. Nirmala Lazar.

**அருட்சகோதிரி நிர்மலா லாசர்**
சென்னை மாநிலத் தலைவி

"கவிதை வரிகள் யாவும்
தோற்றுப் போகும் கண்ணே
மயக்கும் உந்தன் மழலை மொழிச்
சொற்களின் முன்னே"

சிறுவர் அரங்கம் 7 – வது இதழின் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவரையும் எண் ணிபெருமிதம் கொள்கிறேன்.

கடந்த வருடம் முழுவதும் உலகளவில் கொரோனா தொற்றால் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். ஆனால் குழந்தைகளாகிய நீங்கள் மாலை நேர வகுப்பு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூறும் பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றுவதும் மற்றவர்களுக்கும் இதனை பின்பற்ற கூறுவதை கேட்கும் பொழுது பெருமை அடைகின்றேன்.

நீங்கள் உங்களின் தனி திறமைகளை பல்வேறு வடிவங்களாக இவ்விதழில் வெளிபடுத்தி இருக்கின் றீர்கள். உங்கள் படைப்புகளில் நீங்கள் வெளிக் கொணர்ந்த கவிதைகள், கட்டுரைகள், விடுகதைகள் மற்றும் வரைப்படங்கள் மிகவும் சிறப்பாக உள்ளது. இதனை திட்டமிட்ட ஒவ்வொரு மாவட்ட மாலை நேர வகுப்பு பொருப்பாளர்கள் (அருட்சகோதிரிகள் மற்றும் ஆசிரியர்கள்) அனைவருக்கும் இவ்விதழின் மூலம் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கொரோனா காலத்திலும் இவ்விதழில் குழந்தைகளின் தனி திறமைகளை தொடர்ந்து வெளிக் கொணர்ந்த ARUWYE – யின் இயக்குநர் அருட்சகோதிரி. காணிக்கை ராஜ் ஷர்மிளா அவர்களையும் இவ்விதழ் வெளிவர உதவிய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கல்லூர்ரி மாணவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

இக்குழந்தைகளின் படைப்பு மென்மேலும் வளரவும். அவர்கள் ஒழுக்கத்திலும், ஞானத்திலும் வளர இறைவனிடம் ஜெபிக்கிறேன்.

# அருட்சகோதிரியின் அறிமுகம்



உன் குறும்புச் சிரிப்பு, குதுகல பார்வை, மழலைமொழி பேசும் மரகதக் கண்கள். அவை மூடி விரியும் முல்லை மலர்கள் உங்கள் அனைவரையும் சிறுவர் அரங்கம் 7 – வது இதழின் மூலம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறுவர் அரங்கம் இதழின் மூலமாக குழந்தைகளின் தனித் திறமைகளை வெளி கொணர்வதும். அவர்கள் படைப் பாற்றலை மற்றவர்களுக்கு கொண்டு சேர்ப்பதுமே இதன் முக்கிய நோக்கம். இவ்விதழின் மூலம் குழந்தைகள் பல நல்ல விஷயங்களை கற்றுக்கொள்கின்றார்கள். கலந்துரையாடல் மூலம் மற்ற குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்கின்றார்கள்.

இக்குழந்தைகள் தொடர்பான படைப்புகளுக்கும், செயல்பாடுகளுக்கும் உறுதுணையர்க இருந்த எங்கள் மாநிலத் தலைவி அருட்சகோதிரி. நிர்மலா லாசர் அவர்களுக்குஎன் நன்றிகளை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இக்குழந்தைகளின் தேவை-களை அறிந்து அவர்களின் வளர்ச்சியில் அக்கறைக் கொண்டு அவர்களை வடிவமைப்பதில் தங்கள் திட்டங்களையும் செயல்பாடுகளையும் முன்னெடுக்கும் அனைத்து அலுவலர்களையும், பொறுப்பாளர்களையும், அருட்சகோதிரிகளையும், ஆசிரியர்களையும் என் அன்பு குழந்தைகளையும் வாழ்த்தி வணங்குகின்றேன். மேலும் இவ்விதழ் பல வெற்றிகளை கடந்து அனைவருக்கும் பலன் தரஎனது பாராட்டுகள்.

Sr. Sharmila

அருட்சகோதிரி.

**காணிக்கை ராஜ் ஷர்மிளா**

ARUWYE - இயக்குநர்

# பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம்

காலம் காலமாக பெண் குழந்தைகளை காப்போம் அரசாங்கமும் தன்னார்வ தொண்டர்க-ளும் ஏன் பொதுமக்கள் கூட ஏதாவது ஒரு மூளையில் ஓசை எழுப்பிக் கொண்டு தான் இருக்கின்றார்கள். ஆனால் மாற்றம் ஏற்படாத என்று கேள்வி எழுப்பினாள் விடை தெரியாத புதிராகவே இருக்கிறது. மனித வளர்ச்சியில் மிக முக்கியமான பங்கு வகிப்பது பெண்கள் தான். அதே போல அதிக அளவில் பாதிக்கப்படுவதும் அவர்கள் தான். சமுதாயம் வளர பெண்களும் வளர்ச்சி பாதையை நோக்கி பயணிப்பார்கள் என்று பார்த்தால் நாளுக்கு நாள் புதுவிதமான பிரச்சனைகள் என்று முன்பை காட்டிலும் தற்போது தான் அதிகமான இன்னல்களை சந்திக்கின்றார்கள்.

இந்த பிரச்சனைகளின் தளத்தை அறிய மக்களிடம் கருத்து கேட்டால் பெரும்பாலருடைய பதில் பெண்களின் ஆடைகளை மையப்பதுதியாகவே இருக்கின்றது. ஆனால் 30 விழுக்காடு 5 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் பாலின வன்புனர்வுக்கு உட்படுத்தப்படுகிறார்கள் அந்த குழந்தைகளுக்கு ஆடையைப் பற்றி என்ன தெரியும். இன்றைய தொழில்நுட்ப வளர்ச் சியில் காட்டுமிராண்டிகளை நாம் உருவாக்கி கொண்டிருக்கின்றோம். நாளிதழ்களை திறந்-தாலே நாளொன்றுக்கு இரண்டு இடங்களிலாவது சிறுமி பாலியல் தீண்டல் செய்ததைப் பற்றிய செய்தி வருகிறது. இவை அனைத்திற்கும் ஆண்கள் காரணமல்ல ஒரு சில ஆண்க ளுக்கு சரியான விழிப்புணர்வு கொடுக்கப்படாததே பாலின வன்முறை பெருவதற்கு முக்கிய காரணம்.

தாய்மையின் அரவணைப்பிலும், உடன் பிறப்பின் பாசத்திலும் வளர்ந்த எந்த ஒரு ஆணும் பெண்ணை தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கமாட்டான். இந்த கட்டுரையை வாசிப்பவர்கள் ஏன் என்று கேட்கலாம். அவர்கள் பெண்கள் படும் இன்னல்களை ஓரளவிற்கு அறிந்திருப் பார்கள் அவர்களின் தாய்மை மனத்தை அனுபவித்திருப்பார்கள். எனவே ஆண் குழந்தைக ளுக்கு கற்ப்பியுங்கள் பெண்களின் உடல் மாற்றத்தைப் பற்றி அவர்கள் படும் துன்பங்களை பற்றி இந்த சமுதாயத்தை எதிர்கொள்ள அவள் படும் துயரங்களை பற்றி சொல்லுங்கள். அப்படி நீங்கள் வளர்க்கும் பொழுது அவன் மற்ற பெண்களையும் தன் தாயை போல தன் சகோதரி போல மதிப்பான்.

என்ன தான் பெண் குழந்தைகளைப் பற்றிய அறிவை கூறினாலும் இன்றைய வளைத்-தளங்கள் பல ஆபாச படங்களை இலவசமாக அனைத்து வயதினரும் பார்க்கும் வகையில் சித்தரித்துள்ளது. இதனைப் பார்ப்பதன் மூலம் அவர்கள் மிருகங்களாக மாறிவிடுகின்றார்கள். இதனை தடுத்து நிறுத்த பல சமூக ஆர்வலர்கள் முயற்சிகள் மேற்க்கொண்டும், எந்த பலனும் இல்லை. எனவே பெற்றோர்கள் தான் விழிப்பாகவும் கவனமாகவும் தங்கள் பிள்ளைகளின் நலன் கருதி அவர்களை மேற்பார்வையிட வேண்டும்.

நாம் என்ன தான் பாலின சமத்துவத்தைப் பற்றி பேசினாலும் இன்றும் பெற்றோர்கள் வீடுக-ளில் ஆண குழந்தைகளுக்கு ஒரு சலுகை பெண் குழந்தைகளுக்கு ஒரு சலுகை என்றே பார்க்கின்றார்கள். பெண் பிள்ளைகளை அடுத்த வீட்டு பெண்ணாகவே பார்க்கின்றார்கள். நாம் நவீன யுகத்தில் வழிந்தாலும் நம்முடைய மனம் இன்றும் பக்குவபட மறுக்கின்றது. பெண் என்பவள் ஆணுக்கு பணிவிடை செய்பவளாகவே இந்த சமூகம் பார்க்கின்றது.

சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுது நாம் வழக்கை முறையையும் ஒரு முக்கிய காரணம். முன்பெல்லாம் நாம் கூட்டுக் குடும்பமாக இருந்தோம் ஆனால் இப்போது தனி குடும்பமாக மாறிவிட்டோம். நாம் குழந்தைகளை பாதுகாக்க வீட்டிலே முதியவர்களோ அல்லது பெற்றோர்களோ இருப்பது கிடையாது. கணவன் மனைவி இருவரும் வேலைக்கு செல்வதால் வீட்டில் இருக்கும் போது வீட்டு வேலை வெளி வேலை என்று நாம் குழந் தைகளுடன் செலவழிக்கும் நேரத்தை குறைத்துக் கொண்டோம். குழந்தைகளோ பெற்றோரின் அன்பு கிடைக்காததால் சொந்த பந்தம் அண்டை வீடு பக்கத்து வீடு என்று போலி பேச்சில் மயங்கி விடுகின்றார்கள். அவர்கள் காட்டுவது உண்மையான அன்பு என்று எண்ணி அவர்கள் செய்யும் பாலியல் சீண்டையும் பெரும்பாலான குழந்தைகள் வெளியில் சொல்வது இல்லை. இதுதான் கொடுமையின் உச்சநிலை.

இதனை தடுக்க வேண்டும் என்றல் குழந்தைகளுக்கு நல்ல திரைப்படங்கள் மூலமாகவோ, நல்ல நூல்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலமாகவோ வீதி நாடகங்களின் மூலமாகவோ அல்லது நற்சிந்தனைகள் மூலமாகவோ இதனை குழந்தைகளுக்கு கூறலாம். எது நன்மை எது தீமை என்று பெரும்பாலும் அறிந்தாலே குற்றங்கள் குறையும். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பெண் குழந்தைகளை பாதுகாக்கும் சமுதாயத்தை உருவாக்கு-வோம்.

**மசரெல்லோ மடம்,**
**மைக்கேல்புரம்,**
**விழுப்புரம்.**



# கொரோனாவும் குழந்தைகளும்

கொரோனா உலகத்தையே உலுக்கும் பெருந்தொற்று மட்டுமல்லாமல் வாழ்க்கை முறையை மாற்றி அமைக்கும் அழிவின் தளம். எந்தவொரு பேரிடராக இருந்தாலும் பெரும் தாக்கங்களுக்கு ஆட்படுத்தப்படுவார்கள் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தான். இந்த பேரிடர் காலங்களில் குழந்தைகள் கல்வி இடைநின்றல், பாலியல் வன்கொடுமைகள், குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர்கள் மற்றும் ஊட்டசத்து குறைபாட்டினால் பெரிதும் காலத்திலும் குழந்தைகளுக்கு நிகழ்கின்றது என்பதில் சற்றும் அய்யமில்லை. குழந்தைகளின் நலத்தை பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

யுனிசெப் (UNICEF) அமைப்பு எந்த கொரோனா காலத்தில் குழந்தைகள் எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றி சில புள்ளி விவரங்களை வழங்கி இருக்கின்றது .கொரோனா பெருந்தொற்றால் உலகம் முழுதும் கிட்டத்தட்ட 150 கோடி ( 97 %) குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் குழந்தைகள் இடை நிற்றல் விகிதம் அதிகரிக்கும் என யுனிசெப் அமைப்பு தெரிவிக்கின்றது. இந்த கொரோனா காலத்தில் பள்ளிகள் மூடப்பட்டதால் பள்ளியை சார்ந்த சத்துணவு திட்டங்களும் மூடப்பட்டுள்ளன இதனால் குழந்தைளுக்கு ஊட்டசத்து குறைபாடு அதிகரிக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

இந்த கொரோனா காலத்தில் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. 2000 - ம் ஆண்டிலிருந்து பல்வேறு முயற்சிகள் மற்றும் செயல்பாடுகளினால் குறைந்து வரும் குழந்தை தொழிலாளர்கள் இந்த கொரோனா காலத்தில் 20 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. ஒருபுறம் வறுமை குழந்தைகளை தொழிலாளர்களாகி அவர்களின் குழந்தை பருவத்தை விழுங்குகிறது. மற்றொருபுறம் குழந்தைகளையே விழுங்க காத்துக் கொண்டிருக்கிறது.

கொரோன காலத்தில் அடுத்த மாபெரும் சீரழிவு குழந்தை திருமணங்கள். சராசரியாக குழந்தை திருமணம் ஆண்டிற்கு 1 கோடியே 20 லட்சமாக இருந்தது தற்போது 1 கோடியே 50 லட்சமாக உயர்ந்துள்ளது. ஊரடங்கு என்பதால் குழந்தை திருமணங்கள் பற்றி சரியான புகார்களும் வரவில்லை. வந்தாலும் அதனை தடுத்து நிறுத்த அலுவலகங்களில் ஊழியர்களும் இல்லை. ஐநா மற்றும் யுனிசெப் அமைப்புகள் கொரோன காலங்கள் மற்றும் அதனையொட்டிய வருடங்களில் குழந்தை திருமணங்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. தமிழகத்தில் ஊரடங்கு தொடங்கிய காலத்திலிருந்தே பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் தொடர்பாக, போக்சோ சட்டத்திற்கீழ் 9 வழக்குகள் பதிவாகி இருப்பதாக ஏடிஜிபி. ரவி (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு அதிகாரி) கூறுகிறார்.

குழந்தைகள் தொடர்பான ஆபாச படம் பார்ப்பதாக 7 வழக்குகள் பதிவகியுள்ளது. பாலியல் துன்புறுத்தல் சம்மந்தமான வழக்கில் பெரும்பாலும் பெற்றோர்கள் வெளி மாநிலங்களில் வேலை செய்கின்றார்கள்.

இந்த கொரோன காலத்தில் குழந்தைகள் பெரிதும் இணைவழி கல்வி என்ற பெயரில் பெரும்பாலான நேரம் கைபேசியை பயன்படுத்துகிறார்கள். இதன் மூலமாக விளையாட்டு போட்டிகளில் பணம் செலுத்தி விளையாடுவது தேவையற்ற பக்கங்களை பார்ப்பது என்று பல குற்றங்கள் பதிவாகவுள்ளது. இதே போன்று தெரியாத குற்றங்கள் பல உள்ளன. எனவே பெற்றோர்கள் குழந்தை நலனில் அக்கறை செலுத்த வேண்டும். அதே போல் குழந்தைகளும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

**ஆக்ஸிலியம் இல்லம்,**
**காட்பாடி,**
**வேலூர்.**



# ஏழை குழந்தைகளும் கல்வி தடைகளும்

ஏழை குழந்தைகளின் கல்வி இன்றைய காலகட்டத்தில் நான்கு சுவற்றிற்குள் அடைக்கப்பட்ட எலியை போன்றுதான் உள்ளது. 1947 - ஆம் ஆண்டிற்கு பிறகு இலவச தாய்மொழி வழிக்-கல்வி வழங்குவதற்காக அனைத்து கிராமங்களிலும் அரசு பள்ளிகள் தொடங்கப்பட்டன. பல பிரச்சனைகள் குற்றம் குறைகள் இருந்த போதிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி அனைவருக்கும் ஒரே மாதிரியான பாடத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது. 1980 -களுக்கு பிறகு மெட்ரிகுலேசன் பள்ளிகள் தலைதூக்க தொடங்கின. லாபம் சம்பாதிப்பதை-யே குறிக்கோளாக கொண்டிருந்த இந்த தனியார் பள்ளிகளில் தரமான கட்டிடங்களோ தரமான ஆசிரியர்களோ கிடையாது. ஆனால் நாளடைவில் தனியார் பள்ளிகளில் அனைத்-துவிதமான மேம்பாடுகளும் மேற்க்கொள்ளப்பட்டன.

மற்றொரு புறம் அரசு பள்ளிகளின் நிர்வாகம் அடுத்தடுத்து புறக்கணிப்பின் மூலம் சீரழிக் கப்பட்டு அரசு பள்ளிகள் என்றால் தரம் குறிந்தவை. தனியார் பள்ளிகளின் மூலம் ஆங்கில-வழி கல்வி பயில்வது தான் சிறந்தது என்ற கருத்து மக்களிடையே பரவத் தொடங்கின. இதனால் பெற்றோர் தங்கள் குழந்தைகளின் தரமான கல்வியை பற்றி கவலைப்பட ஆரம்பித்-துவிட்டர்கள். நடுத்தர மக்கள் கூட பல ஆயிரம் செலுத்தி குழந்தைகளை மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுப்புவதையே விரும்பினார்கள். இப்பேற்பட்ட காலகட்டத்தில் அரசு பள்ளிக-ளின் நிர்வாகத்தை மேம்படுத்தி, தேவைப்படும் இடங்களில் புதிய பள்ளிகளை திறப்பது, குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வியில் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, எல்லா குழந்தைக ளுக்கும் தாய்மொழி வழியில் தரமான கல்வி வழங்குவதற்கு வழிவகை செய்வது தான் சரியான திட்டமாகும். ஆனால் நம் கட்டாயக் கல்வி பெறும் உரிமைச் சட்டம், 2009 மேலும் ஏழை குழந்தைகளை பாதிப்பதாகவே இருக்கின்றது.

அதற்காக தனியார் பள்ளிகளின் கல்வி முறை தவறு என்று கூறவில்லை. அதே கல்வி முறையை அரசு பள்ளிகளிலும் பின்பற்றினால் நன்றாக இருக்கும். பாரபட்சம் இல்லாமல் அனைத்து குழந்தைகளுக்கும் சமமான இலவச கல்வி, தரமான ஆசிரியர்கள், குழந்தைக-ளின் வளர்சிக்கான பாடதிட்டங்கள் என்று இலவசமாக வழங்கபட வேண்டும். அங்கன்வடிக-ளிலிருந்து கல்லூரி வரையிலான அனைத்து யுத்திகளையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். 10மூ மக்களை மட்டும் ஆரோக்கியமாகவும், அறிவுள்ளவர்களாகவும், பணகரார்களா-கவும் வைத்திருப்பதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு மேற்க்கொண்டு வருகிறது.

கட்டாயக் கல்வி பெறும் உரிமைச் சட்டம், 2009 - ன் படி 25% குழந்தைகள் தனியார் பள்ளிகளில் இலவசமாக படிக்கலாம் என்று கூறுவதை பெரும்பாலான பள்ளிகள ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. அதற்கு அவர்கள் கூறும் பதில்களை பார்த்தால் ஏழை மாணவர்களை பள்ளியில் சேர்ப்பதால் பள்ளியின் ஒழுக்கமும், தரமும் கெட்டுவிடுமாம். ஆசிரியர்களியேயும் ஒழுக்கம் குறையுமாம். ஏற்கனவே பாதிக்கும் மேற்பட்ட இந்திய குழந்தைகள் குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு கூட தாண்டுவது கிடையாது. இல்லையேல் பள்ளியின் பக்கமே வருவதில்லை. அல்லது பாதியில் படிப்பை விட்டுவிடுகின்றார்கள். இந்த பிள்ளைகளில் பெரும்பான்மையினர் வசதி வாய்ப்பற்ற ஏழை குழந்தைகள். மற்றொருபுறம் ஏழை மாணவர்கள் இருந்தால் பாடம் நடத்த கத்த நேரிடும் பாடங்களை படிக்கமாட்டார்கள் என்று ஆசிரியர்கள் பல காரணங்களை கூறுகின்றார்கள். அதே போல பணம் படைத்த பெற்றோர்களும் தங்கள் குழந்தைகள் ஏழை மாணவர்களுடன் சேர்ந்தால் சரளமாக ஆங்கிலம் பேச மாட்டார்கள் என்று குறை கூறுகின்றார்கள். இவ்வளவு பிரச்சனைகளின் மத்தியில் ஏழை மாணவர்களின் கல்வி கேள்வி குறியாக தான் உள்ளது. என்ன செய்ய போகிறோம் நாம்.

**மங்கள கீதம்,**

**அன்மருதை,**
**திருவண்ணாமலை.**



# இனையதளங்களில் குழந்தைகளின் ஈர்ப்பு

இனையதளம் என்பது குழந்தைகளுக்கான ஒரு சிறப்பு வாய்ந்த தளம். வீட்டு வேலைகள், ஆன்லைன் விளையாட்டுகள், சமூக வலைபின்னல்கள், விடியோக்கள், இசை, படிப்பு சம்ம-தமான செயலிகள் மற்றும் பலவற்றின் உதவியுடன் அவர்களுக்கு கற்ப்பிகின்றது. அதற்கு நிகராக இனையதளங்கள் தங்கள் குழந்தைகளின் வாழ்கையை சீரழிக்கும் விதமாகவும் உருவாக்கபட்டிருக்கின்றது என்பது தான் நிதர்சனமான உண்மை. இன்றைய காலகட்டத்தில் பெற்றோர்களுக்கு ஒரு முக்கியமான சவாலே தங்கள் குழந்தைகள் இனையதளங்களில் சரியான பக்கங்களை உபயோகிக்கிறார்களா என்று கண்காணிப்பது தான். ஒரு குழந்தையின் மூளை வளர்ச்சியானது 90 சதவீதம் ஆரம்ப காலங்களிலே முடிவடைந்து விடுகிறது. இந்த தொழில்நுட்ப கருவிகள் அதிக பயன்பாடானது குழந்தைகளின் மொத்த வளர்ச்சியில் பல பாதிப்புகளை ஏற்ப்படுத்தும். உங்கள் குழந்தைகள் நிஜ உலகத்துடன் தொடர்பு கொள்ளா-மல் அதிக நேரம் தொழில்நுட்ப கருவிகளுடன் இருந்தால் உடனே நீங்கள் அதனை தடுத்து நிறுத்தவேண்டும்.

குழந்தைகள் தொடர்ந்து தொழில்நுட்ப கருவிகளை உபயோகிப்பதால் அவர்களுடைய பேச்சு, மொழி மற்றும் மூளை வளர்சிகளை முற்றிலும் பாதிக்கும். குழந்தைகள் தங்கள் பொம்மைகளுடன் விளையாடும் நேரம் கொஞ்சம் கொஞ்சமாக குறையும். பெற்றோர்களுடனும் உடன்பிறப்புகளுடனும் உரையாடும் நேரம் குறைந்து விடும். வெளியே சென்று மற்ற குழந்தைகளுடன் நேரத்தை செலவிடமாட்டார்கள். நண்பர்களுடன் நேரத்தை செலவிட ஆசை பட மாட்டார்கள். மற்ற நண்பர்களுடன் தங்கள் இன்ப துன்பங்களை பகிர்த்துக் கொள்ள மாட்டார்கள்.

அனைத்து தொழில்நுட்பங்களும் உங்கள் குழந்தைகளுக்கு பிரச்சனைகளை ஏற்படுத்தாது. அதே போல எல்லா தொழில்நுட்பங்களும் நன்மையும் தருவது கிடையாது. நீங்கள் எவ்வாறு உங்கள் குழந்தைகள் நன்கு சாப்பிடுகிறார்களா என்று கண்காணிப்பது போல். அவர்கள் வளைதளங்களில் அல்லது இணைதளங்களில் தரம் வாய்ந்த ஊடகங்களை பயன்படுத்துகி-றார்களா என்று கண்காணிக்க வேண்டும். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கண்காணித்-துக் கொண்டே அவர்களுக்கு வீட்டு வேலைகள், உடல் செயல்பாடு, குடும்பம் மற்றும் நண்பர்களுடன் நேரம் செலவிட கற்றுக்கொடுங்கள். உங்கள் குழந்தைகளை வன்முறை ஊடகங்கள் மற்றும் வணிக ரீதியிலான பொருட்களை பார்ப்பது போன்றவற்றை தவிர்ப்பது நல்லது.

ஒரு உயர் தொழில்நுட்ப உலகில் வாழ்வது. எப்போதும் பாதுகாப்பாகவும், பொறுப்புணர்வு-டனும் எப்படி இருப்பது என்பதை பற்றி குழந்தைகளுக்கு சொல்லி கொடுங்கள். பெஸ்புக், வாட்சாப் போன்ற சமூக வளைபின்னல்களை குழந்தைகள் பயன்படுத்தும் பொழுது அவர்க-ளின் அரட்டைகளை கவனியுங்கள். பெரியவர்களுக்கான விளையாட்டை குழந்தைகள் விளையாடினால் அவர்களுக்கு அது ஏற்றதா என்று தேர்வு செய்யுங்கள். ஏன் என்றால் பெரியவர்களுக்கான விளையாட்டில் பெரும்பாலும் பாலியல், வணிகம் மற்றும் வன்முறை கலந்திருக்கும் அது குழந்தைகளுக்கு நல்லதல்ல.

குழந்தைகள் தொழில்நுட்ப கருவிகளை உபயோகிக்கும் நேரத்தை குறைக்க வேண்டுமென்றால் முதலில் பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் நேரத்தை குறைத்து குழந் தைகளுடன் அதிக நேரத்தை செலவிடுங்கள். குழந்தைகளை தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்த கூடாது என்று கண்டிக்காதீர்கள். அது அவர்களை மாற்றாது. நீங்கள் இல்லாத தருணங்களில் அவர்கள் பயன்படுத்துவார்கள். அவர்கள் புரிந்துக் கொள்ளும் விதத்தில் எடுத்துக் கூறுங்கள். ஆபாசமான பதிவுகளை உள்ளடக்கிய படங்கள், பக்கங்கள், வீடியோ கிளிப்புகள் போன்றவற்றை குழந்தைகளின் பார்வையிலிருந்து தவிர்க்க வேண்டியது பெற்றோ-ரின் முதன்மையான கடமை. குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களையும், ஒழுக்கத் தையும் கற்றுகொடுக்க விரும்புகின்றார்கள். ஆனால் இனையதளங்கள் நிமிடத்தில் தலை கீழாக மாற்றிவிடும் கவனமாக இருங்கள்.

ஈரோடு மரியாலையா,
கஸ்பாபேட்டை,
ஈரோடு.



# குழந்தைகள் சந்திக்கும் பிரச்சனைகள்

இன்றைய காலகட்டத்தில் குழந்தைகள் பல பிரச்சனைகளை எதிர்க்கொள்கின்றார்கள். அதில் முதலாவது ஊட்டச்சத்துக் குறைபாடு நாம் பெரும்பாலும் என்ன நினைகின்றோம் என்றால் வறுமையும் உணவு தட்டுபாடும் தான் ஊட்டச்சத்து குறைபாடுக்கு முக்கிய காரணம் என்று எண்ணுகிறோம் ஆனால் அது உண்மையல்ல. குழந்தைகளுக்கு நாம் சத்தான உணவை தருவது கிடையாது. இங்கே பெரும்பாலான பெற்றோர்களுக்கு எந்த உணவில் எவ்வளவு ஊட்டச்சத்து இருக்கிறது என்றே தெரியவில்லை. அதனை நன்கு அறிந்து குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உள்ள உணவுகளை கொடுங்கள்.

இளம் குழந்தைகள், வளரிளம் பருவத்தினர் பாலியல் வன்முறை பிரச்சனைக்கு ஆளாக் கப்படுகிறார்கள். இந்த பாலியல் வன்முறை என்பது உடல் ரீதியாகவோ, வாய்மொழியாகவோ அல்லது உணர்வு ரீதியாகவோ இருக்கலாம். இந்தியாவில் 31 சதவீத குழந்தைகள் பாலியல் வன்முறையால் பாதிக்கபடுகிறார்கள்.

கல்வி என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கப்பெற வேண்டிய அத்தியாவசிய உரிமை. அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வி கிடைப்பது கிடையாது. என்ன தான் சட்டங்கள் இயற்றினாலும் இன்றும் வறுமை, பெற்றோர்களின் அறியாமை, புலம்பெயர்வு, பெற்றோர்களின் மறைவு, கற்றலின் விருப்பமின்மை போன்ற காரணகளால் குழந்தைகள் இடை நின்று விடுகின்றார்கள்.

குழந்தைகள் எதிர்கொள்ளும் நோய்கள் சரியான உணவு கொடுக்கப்படவில்லை என்றால் குழந்தைகளுக்கு அடிக்கடி நோய்கள் ஏற்ப்பட வாய்ப்புள்ளது. குழந்தைகளுக்கு சரியான தாய்ப்பால் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்காத பட்சத்தில் குழந்தைகளுக்கு சரியான தடுப்பூசிகள் போடவில்லை என்றாலும் நோய் தாக்கத்தால் பல பிரச்சனைகளை எதிர்க் கொள்கிறார்கள்.

இப்படி சொல்லி கொண்டே போகலாம். ஆனால் பெரியவர்களாகிய நாம் அவர்களின் தீர்க்கக் கூடிய பிரச்சனைகளை அறிந்து அதற்காக யுத்திகளை மேற்க்கொண்டு அவர்களை பிரச்சனைகளிலிருந்து விடுவிக்க வேண்டும். பிரச்சனைகளை கண்டு அஞ்ச கூடாது. அதன் சாராம்சம் தெரியவில்லை என்றால் அதைப்பற்றி கேட்டு அறிந்துக் கொள்ள வேண்டும்.

**மஸ்ரல்லோ இல்லம்**
**கோடம்பாக்கம்**
**சென்னை**

# கவிதைகள்

1. சாதி ஒழிப்பு

சாதி என்ற கொடிய நோயை
ஒழிக்க நினைக்கிறோம்...
மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து
வாழ துடிக்கிறோம்...
படிக்கும் குழந்தையிடம்
சாதி கேட்டு திரியுரோ...
இது எப்ப மாறுமுனு
நீயும் நானும் கேட்டு தவிக்குரோ...
சாதி மதம் அனைத்தையும்
தூக்க நினைக்கிறோம்...
இந்தியாவையே வல்லரசு
ஆக்க துடிக்கிறோம்...!!!

சி. பவித்ரா
கொண்டகுப்பம்
வேலூர்

2. தன்னம்பிக்கை

வானமோ பூமியோ
அழியும் நிலை வந்தாலும்
உன் வாழ்க்கையில்
தோல்வியை கண்டு
துவண்டு போய் விடாதே...
வெள்ளி வெடு
தொலைவில் இல்லை - என்று
உன்னை ஊக்கபடுத்திக் கொள்...
அப்பொழுது தான் வெள்ளி
உன் கையில் வந்து சேரும்...!!!

ரா. வருண்
கொண்டகுப்பம்
வேலூர்

3. நட்பு

ஒரு மரத்தின் பழைய இலைகள்
உதிர தொடங்கி புதிய இலைகள்
வளர தொடங்கும்...
இது போல் தான்
எங்கள் நட்பும்...

நான் மரம் என்றால்
என் நண்பர்கள் - என்னை
சுற்றியுள்ள இலைகள்...
இனி பழைய நண்பர்கள் - எனும்
இலைகள் உதிர தொடங்கி
புதிய நண்பர்கள் - எனும்
இலைகள் வளர தொடங்கும்...!!!
I Miss My Old Leaves…

**ச. அந்தோணி ஜெரால்டு**
**மைக்கேல்புரம**
**விழுப்புரம்**

4. மாதவிடாய்

பெண்ணே ஆண்களின்
வயிற்று வலியோ சிறிது
இதனை விட உனது
மாதவிடாய் வலியோ பெரிது...

இந்து மூஸ்லீம் கிறுஸ்துவர்
அனைவரும் ஒன்று சேர்கின்றனர்
அதுவே மாதவிடாயின் போதோ
உன்னை மட்டும் ஒதுக்குகிறார்கள்

பெண்ணே உனது வெற்றியை
நாடே கொண்டாடும்...
ஆனால் உனது மாதவிடாயின் போதே
வீடே திண்டாடும்...

கடையில் நேப்கினை மறைத்து
கொடுக்கும் கடைகாரர்கள்...
இனிமேல் ஆண்களால்
மாற வேண்டும் இந்த சமுதாயகாரர்கள்...!

**டி. ரெய்மன் பிரிட்டோ**
**மைக்கேல்புரம்**
**விழுப்புரம்**

5. கொரோனா

பூமி உனக்கு மட்டும்
சொந்தமென்று ஆணவத்தில் ஆடினாய்...
பூமியை மாசு ஆக்கினாய்
அனைத்தையும் காசும் ஆக்கினாய்...
அன்பை மறந்தாய்
அணு ஆயுதங்களை அடுக்கி வைத்தாய்...
கண்ணுக்கு தெரிந்ததை
எல்லாம் கைப்பற்ற நினைத்தாய்...
கடைசியில் கண்ணுக்கு தெரியாத
எனக்காக பயந்தாய்...
ஓடினாய் ஒழிந்தாய் கை கழுவினாய்
முகக் கவசம் அணிந்தாய்
கடவுளிடம் கெஞ்சினாய்
ஆனால் என்ன செய்வது
அவரும் கையை கழுவிவிட்டு
தன்னை “கொரண்டைன்” பண்ணிக் கொண்டார்...!

**ம. கவியரசு**
**கஸ்பாபேட்டை**
**ஈரோடு**

6. வறுமை

அம்மா... அம்மா...
அது அழகா இருக்குமா...
ஒன்னு மட்டும் வாங்கித்தாம்மா...
எனக் கெஞ்சும் பிஞ்சுவிடம்
நாளைய உணவுப் பணத்தை
பரிசளிக்கும் தாயின் உச்சநிலை...!

**ரா. கங்கா தேவி**
**கஸ்பாபேட்டை**
**ஈரோடு**

7. குழந்தை தொழிலாளர்கள்

அவர்கள்
சுமக்க வேண்டியது
புத்தக மூட்டையா?
புளி மூட்டையா?

அவர்கள்
பட்டத்திற்கு
நோட்டுகளா?
திட்டுகளா?

புழுதியின் பூசலில்
சிக்கித் தவிக்கும்
இளந்நெஞ்சுகளுக்கு...
மகாத்மா யார்?
சீக்கிரம் பொய் கண்ணாடியை பார்...!!!

சா. பிரியா
அன்மருதை
திருவண்ணமலை

8. விவசாயி

ஈரமாக இருந்த நிலம்...
வறண்டு வருவதுபோல்...
விவசாயின் மனமும்...
வறண்டு வருகிறது...!!!

கடனை கொடுக்க முடியாமல்...
உயிரை கொடுக்கிறார்கள்...
உலக மயமாக்களின்...
ஈர்ப்பு உலக முதலீட்டை...
அதிகரிக்க செய்கிறது...
உணவளிப்பவனை...
உதறி தள்ளி விடுகிறது...!!!

ம. சாந்தி
அன்மருதை
திருவண்ணமலை

9. நீ... நீயாக இரு

மற்றவர்களைப்
பார்த்து பார்த்து
நீ அவர்களைப்
போல் வாழ்ந்தால்
உன்னைப் போல்
யார் வாழ்வது
ஆகவே நீ
நீயாகவே இரு...!!!

கா. சித்ரா
கோடம்பாக்கம
சென்னை

10. புன்னகை

கொடுப்பவரை
ஏழை ஆக்காமல்
பெறுபவரை
செல்வந்தன் ஆக்கும்
ஒரே செயல்
புன்னகை மட்டுமே...!!!

**பி. சோபனா**
**கோடம்பாக்கம்**
**சென்னை**



# விடுகதைகள்

1. தச்சர் செய்யாத கதவு தானே திறக்கும், தானே மூடிக்கொள்ளும்.
2. இந்தக் கடைக்கு வார விடுமுறை என்பது கிடையவே கிடையாது.
3. இந்த நீர் கடலிலும் கலக்காது குடிக்கவும் முடியாது.
4. இந்த காவலாளி வீட்டிலேயே இருப்பான். இவனது கூட்டாளி மட்டும் அடிக்கடி வெளியே சுற்றச் சென்று விடுவான்.

**எம். ஜோதி கிருஷ்ணா**
**கோடம்பாக்கம்**
**சென்னை**

5. பூமியில் பிறந்து புகையாக மாறி மேலே போகும்.
6. இதை தொட்டு பார்க்கத்தான் முடியும் எட்டிக்கூட பார்க்க முடியாது.
7. அமைதியான பையன் தான் ஆனால் அடிக்காமலே அழுவான்.
8. எங்க அம்மா போட்ட சிக்கலை யாராலும் எடுக்க முடியாது.

**எ. மெர்லின் ரோஸி**
**மைக்கேல்புரம**
**விழுப்புரம்**

9. இவன் வலை தயாரித்து விரித்து வைப்பான், ஆனால் மீன் மட்டும் பிடிக்கமாட்டான்.
10. தலை மட்டும் கொண்டு ஊரெல்லாம் சுற்றும் சிறகு கிடையாது.
11. ஆயிரம் பேருக்கு ஓர் இடைகச்சை.
12. சின்ன சின்ன அறைகள் உண்டு, இது வீடு அல்ல. சிறந்த அழகு கொண்டிருக்கும் சித்திரமும் அல்ல. காவலுக்கு ஆயிரம் வீரர்கள் உண்டு கோட்டையும் அல்ல.

**சி. பகவதி**
**கஸ்பாபேட்டை**
**ஈரோடு**

13. புறப்பட்டது தெரிகிறது ஆனால் போன சுவடு தெரியவில்லை அது என்ன.

14. பார்த்தால் கல்; பல் பட்டால் நீர் அது என்ன.

15. பிடி இல்லாத குடையைத் தொட முடியவில்லை அது என்ன.

16. மட்டை உண்டு; கட்டை இல்லை; பூ உண்டு, மணமில்லை அது என்ன.

**வி. கயத்திரி**
**ஜோதி நகர்**
**வேலூர்**

17. முகம் பார்த்து வளரும்; முடிவில்லாமல் தொடரும் அது என்ன.

18. சின்ன தம்பி, குனிய வச்சான் அது என்ன.

19. உணவு கொடுத்தல் வளரும், நீர் கொடுத்தல் அழியும்.

20. வெயிலில் மலரும், காற்றில் உலரும்.

**வ. நிவேதா**
**அன்மருதை**
**திருவண்ணமலை**

**விடைகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. கண் இமை | 6. முதுகு | 11. துடப்பம் | 16. வாழை |
| 2. சாக்கடை | 7. ஐஸ் கட்டி | 12. தேன்கூடு | 17. சொந்தம் |
| 3. கண்ணீர் | 8. இடியாப்பம் | 13. புயல் | 18. முள் |
| 4. பூட்டு, சாவி | 9. சிலந்தி | 14. பனிக்கட்டி | 19. நெருப்பு |
| 5. பெட்ரோல் | 10. தபால் தலை | 15. வானம் | 20. வியர்வை |

# கட்டுரைகள்

## கொரோனா வைரஸ்

முன்னுரை

2019 டிசம்பர் மாதத்தில் சீனாவில் உள்ள வுகான் மாநிலத்தில் ஒரு நோயாளி மருத்துவரிடம் சென்றார். அதிகமாக காய்ச்சல் இருப்பதாகவும் அவ்வபோது மூச்சு திணறல் ஏற்ப்படுவதாகவும் கூறினார். மருத்துவர்கள் தொடர்ந்து அந்த நபருக்கு மருந்துகள் கொடுத்தும் உடல் மேலும் மேலும் பலவீனமாகவே இருந்தது. அவரை தொடர்ந்து பல நோயாளிகள் அதே பிரச்சனையுடன் மருத்துவர்களை அணுகினர். அதனை தொடர்ந்து டிசம்பர் 31 - ஆம் தேதி கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. இதனை சீனாவின் தேசிய சுகாதார மையம் உறுதி செய்ததின் அடிப்படையில் மக்களுக்கு தீவிரமான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. கொரோனா அறிகுறிகள் இருந்தால் உடனே மருத்துவர்களை அணுக வழியுறுத்தப்பட்டது. இதற்கிடையில் பெரும்பாலான மேலை நாடுகளுக்கு இந்த நோய் பரவத் தொடங்கியது.

கொரோனா வைரஸ்

இந்த தொற்று 90 சதவீதம் கொரோனா வைரஸ் குடும்பத்தை சேர்ந்தது தான் என்று மருத்துவர்கள் உறுதி செய்தனர். ஏற்கனவே கொரோனா குடும்பத்தில் 6 வைரஸ்கள் உள்ளது. இந்நிலையில் இது 7 - வது வைரஸாக அறிவிக்கப்பட்டது. எனவே இதற்கு ஊழுஏஐனு - என்னும் இதனை 2019 - ஆம் ஆண்டு கண்டறிந்ததால் இதனை ஊழுஏஐனு 19 என்று பெயரிடப்பட்டது. 2002 - இல் சார்லஸ் ளுயுசுளு - ஊழுஏ என்னும் வைரஸ் தொற்றை கண்டறிந்தார். இதுவும் சீனா நாட்டில் தான் கண்டறியப்பட்டது. இந்த வைரஸ் வவ்வால் மற்றும் காட்டுபூணையால் மனிதனுக்கு பரவியது. இந்த வைரஸ் தொற்றால் 744 மக்கள் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கொரோனா வைரசால் பழியானவர்கள்

கொரோனா வைரஸ் தொற்றில் ஒன்றான ஆநுசுளு - ஊழுஏ கொரோனா என்பது 2012 - ஆம் ஆண்டு சவுதி அரேபியாவில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனை கேமல் ப்ளு என்றும் அழைப்பார்கள். எனென்றால் இந்த வைரஸ் குதிரையிலிருந்து மனிதனுக்கு பரவியது. இந்த வைரஸ் பரவலினால் சுமார் 800 மக்கள் பலியானார்கள். இந்த கொரோனா தொற்றை தடுக்க ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்தாலும் இன்று வரை இதற்கு சரியான தடுப்பு மருந்து கண்டறியவில்லை. ஒரு நோய் விலங்கிலிருந்து மனிதனுக்கு பரவும் பொழுது அதனை கட்டுப்படுத்துவதும் மருந்தை கண்டுபிடிப்பதும் கடினமாக உள்ளது

கொரோனா பாதுகாப்பு முறைகள்

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள உலக சுகாதார அமைப்பின் மிக முக்கியமான மற்றும் அடிப்படை பாதுகாப்பு முறைகள் உங்களின் கைகளை அடிக்கடி சரியான முறையில் சோப்பு அல்லது ஆல்கஹால் சேர்த்த கிருமிநாசி-னியால் சுத்தம் செய்யுங்கள். இவை உங்கள் கைகளில் வைரஸ் இருந்தால் கொன்றுவிடும். கைகளால் கண்கள், மூக்கு மற்றும் வாயை தொடுவதை தவிர்க்க வேண்டும். முககவசம் மற்றும் கையுரை அணியுங்கள். எங்கு சென்றாலும் இடைவெளி விட்டு நில்லுங்கள்.

முடிவுரை

கொரோனா தீதுண்மி அல்லது கொரோனா வைரஸ் பாலுட்டி மற்றும் பறவை நோய்களை ஏற்ப்படுத்தும் ஒரு தீதுண்மி ஆகும். இவை பசுக்கள் மற்றும் பன்றிகளுக்கு வயிற்றுபோக்கை எற்படுத்தும். கோழிகளுக்கு சுவாச நோயை ஏற்படுத்தும். இத்தீதுண்மிகள் மனிதர்களுக்கும் சுவாச நோய் தொற்றுகளை ஏற்படுத்தும். இத்தொற்றுகள் பெரும்பாலும் மிதமானவையாக இருந்தாலும் அரிதான சந்தர்பங்களில் ஆபத்தானவையாக உள்ளது.

நா. செந்தில
அன்மருதை
திருவண்ணமலை

## குழந்தைகள்

முன்னுரை

குழந்தைகளை நாம் நன்றாக வளர்க்க வேண்டும். நாளைய உலகம் குழந்தைகள் கையில் தான் இருக்கபோகிறது என்று நாம் தொடர்ந்து கூறிக்கொண்டே இருக்கின்றோம். மனிதர்கள் பூமியில் அவதரிப்பார்கள் இறந்தும் போவார்கள். ஆனால் நாடு அப்படியே தான் இருக்கும். எனவே நாட்டின் எற்றத்தாழ்வுகளை மனதில் கொண்டு வரப்போகும் தலைமுறையை சிறப்பாக வளர்த்தெடுக்க வேண்டும்.

இன்றும் நேற்றும்

நமக்கு முந்திய தலைமுறை நமக்காக பாடுபட்டு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார்கள். இன்றும் அதனை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். சில சமயங்களில் நாம் மற்றவர்க-ளின் சுதந்திரத்தை கேடுப்பதில் ஆர்வம் காட்டுகின்றோம். இந்த நிலை நம்மோடு முடிந்துவிட வேண்டும். நம் பின் வரும் தலைமுறையைச் சீராக வளர்க்க வேண்டும்.

கல்வி புகட்டல்

அனைத்து கிராமங்களிலும் பள்ளிகள் தொடங்க வேண்டும். இந்தப் பள்ளியில் பயில ஏடுகள் வேண்டாம். கரும்பலகைகள் வேண்டாம். பார்த்தல், கேட்டல் மற்றும் சொல்லுதல் ஆகிய னவே பயிற்சி. இந்தப் பருவத்தில் உற்றுக் காணல், கவனமாக கேட்டல், ஆர்வமுடன் சொல்லுதல் ஆகிய பயிற்சிகள் விளையாட்டுகளுடனும் இசையுடனும் சொல்லித் தர வேண்டும்.

பாரம்பரியமும் சுற்றுச் சுழலும்

குழந்தைகளுக்கு பாரம்பரியமும் சுற்றுச் சுழலும் சிறப்பாக அமைந்தால் குழந்தைகள் ஒழுக்கத்துடனும் நல்ல பழக்க வழக்கங்களுடனும் வளர்வார்கள். இன்றைய காலகட்டத்தில் இது இரண்டுமே சரியாக கிடைக்காததே பெரும் குறையாக உள்ளது. இன்றைய கால சுழலில் சிறப்பான ஒரு சமுதாயத்தை குழந்தைகளுக்கு அமைத்து தருவதே பெற்றோர்க ளுக்கும், தன்னார்வ தொண்டர்களுக்கும், சமூக நிறுவனங்களுக்கும், அரசிற்கும் முக்கிய பொறுப்பு.

முடிவுரை

குழந்தைகள் நலத்திற்காகவும் அவர்களின் வளர்ச்சிக்காகவும் தொடர்ந்து பல செயல்முறை-களை நடைமுறைப்படுத்துவோம். அவர்களை முறையாக வளர்த்தெடுப்போம். அவர்கள் சீராக வளர வாய்ப்பளிப்போம். இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் அறிவையும் ஆற்றலையும் முறையாக வளர்ப்பது நமது கடமை என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

**அ. மேரி ஜெனிபா**
**மைக்கேல்புரம**
**விழுப்புரம்**

## அறிவு

முன்னுரை

அறிவு மனித வாழ்கையை இயக்கம் ஒரு சிறந்த கருவி. இன்று பெரும்பாலானோர் கருதுவது போல அறிவு என்பது தகவல்கள் அல்ல. அறிவு என்பது ஒரு கருவி. செவி வழிக் கேட்கும் செய்திகளில் உள்ள நன்மை தீமைகளை ஆய்வு செய்வது அறிவு. நாம் ஏற்றுக் கொள்ள கூடிய நன்மைகளை எடுத்துக் கொள்ளும். அதே போல் தான் இந்த உலகில் உள்ள பொருட்களை சார்ந்தது தான் வாழ்க்கை சில நன்மை போன்று தெரியும், சில தீமைகளாக தெரியும்.

அறிவும் பகுத்தறிவும்

மனிதர்களுக்கு இயல்பாகவே பகுத்தறிவு என்பது உண்டு. ஆனால் பெரும்பாலனோர் அதனை பயன்படுத்துவது கிடையாது. அறிவு வளர்வதால் தான் ஞானம் கிடைக்கிறது. ஒழுக்கமுடன் வாழ்வதற்கு அறிவு தான் மூலதனம். அறிவுள்ளவர் எல்லா செல்வங்களையும் பெற்றவர்கள் ஆவர்கள். அறிவை கல்வியால் பெற முடியும். ஆனால் கல்வி கற்றவர் எல்லாம் அறிவு டையவர் என்று கூற முடியாது. கல்வி பெற்றவர்களிலும் அறிவில்லாதவர்கள் இருக்கின் றார்கள்.

அறிவின் சிறப்பம்சம்

அறிவு மனிதனை துன்பத்திலிருந்து காக்கின்றது. வரப்போகும் துன்பத்திலிருந்தும் மக்களை காப்பாற்றுகிறது. வாழ்க்கை என்பது இறைவனால் கொடுக்கப்பட்ட அறிவு கொடை. இந்த வாழ்க்கையை சிறப்பாக வாழ்ந்து செழிக்கச் செய்வது அறிவு. அறிவு காட்டும் வழியில் சென்றாலே நம் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

அறிவுடையாரின் சிறப்பு

அறிவு என்பது ஒருபோதும் தீமை செய்யாது. அறிவுடையார்கள் எப்போதும் பலவீனமா-னவர்களாக இருக்க மாட்டார்கள். அதே போல இக்கட்டான சூழ்நிலைகளில் மாட்டிக்கொண்டு தவிக்கமாட்டார்கள். சூழ்நிலைகளை கடந்தும் உருவாக்கியும் சிறப்புடன் வாழ அறிவு அவர்களுக்கு துணையாக இர்ருக்கும்.

முடிவுரை

இயற்கை அறிவுக்கு ஆக்கம் சேர்ப்பது நூலறிவு. நூலறிவுக்கு ஆக்கம் சேர்ப்பது ஆய்வியல் சார்ந்த அறிவு. ஆராய்ந்து அறிந்த அறிவுக்கு நுண்ணறிவு என்று பெயர். நுண்ணறிவுக்கு ஆக்கம் சேர்ப்பது பட்டறிவு. இப்படி பல கோணங்கள் எடுக்கும் அறிவு, வாழ்வை மேம்படுத்த உறுதுணையாக இருக்கும்.



ரா. ஜோதி
மேலப்பாடி
வேலூர்

# என் கனவு

நான் எதிர்காலத்தில் மருத்துவராகப் பணி செய்ய விரும்புகிறேன். இந்த உலகத்தில் நிறைய மருத்துவமனைகள் உள்ளன. அதே போல நிறைய மருத்துவர்களும் இருக்கிறார்கள். ஆனால் பல பேர் தங்கள் உடலை சரிவர பராமரித்துக் கொள்வது கிடையாது. உடல் நலத்தை சரியாக கவனிக்காததால் பல பிரச்சனைகளுக்கு ஆளக்கப்படுகின்றார்கள். அதற்கு காரணம் நம் மக்கள் தங்கள் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்து கொள்வது கிடையாது. இதனால் மக்களிடையே நோய்கள் பரவுகின்றன. இப்படிப்பட்ட சுழலில் நம் நாட்டில் மருத்-துவமனைகளும் மருத்துவர்களும் இல்லை என்றால் பலர் இறக்க நேரிடும். எனவே நம் குடும்பங்களில் சமுதாயத்திலும் அனைவரையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது நமது கடமையாகும்.

நான் மருத்துவராக ஆசைப்படுவது அனைவருக்கும் மருத்துவ உதவி செய்வதற்கு தான். உலகிலுள்ள அனைவரும் பல மருத்துவ பிரச்சனையால் பாதிக்கப்படுகின்றார்கள். அதில் சிலரையாவது நான் சேவை செய்வதன் மூலம் மன நிம்மதியை அடைவேன். அதனை தொட-ர்ந்து ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவ உதவி செய்வேன். இன்று மருத்துவ செலவு என்பது அதிகரித்துவிட்டது. எனவே ஏழை மக்கள் அதற்கு செலவிட முடியாமல் கஷ்டப்படு கிறார்கள். எனவே அவர்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிப்பேன்.

மருத்துவராக பணி செய்ய விரும்பினால் மட்டும் போதாது அதற்கு கடினமாக உழைக்க வேண்டும். இது ஒரு சுலபமான வேலை கிடையாது. மனதை எப்போதும் கட்டுப்பாட்டில் வை-த்திருக்க வேண்டும். எந்த சூழ்நிலையாக இருந்தாலும் உதவி என்று கேட்பவர்களுக்கு உதவி வழங்க வேண்டும். உலகத்தில் உள்ள பலருக்கு உதவி செய்ய எற்ற பணி மருத்-துவராக இருப்பது மட்டுமே என்பது என் கருத்து. பிறர் நலமுடன் வாழ நான் உதவி புரிந்-தால் அதுவே எனக்கு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் தரும்.

பி. தினேஷ்
கோடம்பாக்கம
சென்னை

# நட்பின் பெருமை

நான் என் நண்பன் சுந்தரோடு தினந்தோறும் பள்ளியின் நுலகத்திற்கு சென்று பள்ளித் தேர்வுகளுக்காக படிப்பேன். அதனால் நாங்கள் தேர்வில் எப்போதும் அதிக மதிப்பெண்களைப் பெறுவோம். பள்ளி ஆரம்பிக்கும்முன், நாங்கள் நூலகத்திற்குச் சென்று தேர்வுகளுக்குப் படிப்போம். ஒரு நாள் நான் என்னுடைய பணப்பையை பள்ளிக்குக் கொண்டு செல்ல மறந்-துவிட்டேன். இடைவேளையின் போது நான் எப்படி சாப்பிடப் போகிறேன் என்று எண்ணியவாறு கவலையுடன் இருந்தேன். அப்போது சுந்தரின் பணப்பையை அவனுடைய மேசையில் வைத்-துவிட்டு உணவிற்காக சென்றிருந்தான். அப்போது என்னுடைய மனதில் ஒரு யோசனை தோன்றியது.

எனக்கு பசியாக இருந்தால் நான் சுந்தரின் பணப்பையிலிருந்து பணத்தை எடுத்தேன். சுந்தரிடம் பிறகு சொல்லிக் கொள்ளலாம் என்று எண்ணியவாறு உணவகத்திற்கு சென்றேன். நான் அவனிடம் இருந்து எடுத்த பணத்தை கொண்டு உணவு வாங்கினேன். பிறகு, நான் அவனிடம் சென்று “சுந்தர் நான் உன்னுடைய பணத்தை எடுத்து உணவு வாங்கினேன் என்று கூறினேன். சுந்தர் அதை கேட்டதும் கோபமடைதான். நீ ஏன் என்னுடைய பணப்பையை என்னுடைய அனுமதி இல்லாமல் எடுத்தை அது தவறு எட்று சத்தம் போட்டன். அன்றிலிருந்து சில நாட்களாக சுந்தர் என்னிடம் பேசவில்லை. நான் அவனிடம் மனிப்பு கேட்டதோடு பணத்தையும் திருப்பிக் கொடுத்துவிட்டேன். ஆனால் அவன் இன்னும் என் மேல் கோவமாகவே இருந்தான். அவன் கோவம் குறையவில்லை என்று அறிந்து நான் கோபமானேன்.

நான் என்னுடைய பிரச்சனையை பற்றி என் பெற்றோரிடம் கூறினேன். அதை கேட்ட என் பெற்றோர் சுந்தருக்கு ஒரு கடிதம் எழுத சொன்னார்கள். நானும் கடிதம் எழுதினேன். அந்த கடிதத்தில் மறுபடியும் சுந்தரிடம் மன்னிப்பு கேட்டேன். மேலும் நான் என் தவறை ஒற்றுக் கொண்டேன். இறுதியில் நான் சுந்தர் ஒரு நல்ல நண்பன் என்று கடிதம் எழுதினேன். மறுநாள் சுந்தரிடம் அந்தக் கடிதத்தை கொடுத்தேன். அவன் கடிதத்தைப் படித்தான். திடீரென்று அவன் சிரித்தான். நான் ஆச்சிரியமடைந்தேன். அருணா நீயும் ஒரு நல்ல தோழி தான் அதனால் உன்னை மணிக்கின்றேன் என்று கூறினான். அதை கேட்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். அன்றிலிருந்து நாங்கள் பள்ளிக்கு சேர்ந்து சென்றோம். மேலும் நூலகத்தில் இணைந்து படித்து வருகின்றோம்.

கா. மதன
கஸ்பாபேட்டை
ஈரோடு




# வரைபடங்கள்

## ஓநாயும் ஆடு மேய்க்கும் இடையனும்!

முன்னொரு காலத்தில், ஒரு ஆடு மேய்க்கும் இடையச் சிறுவன் தனது ஆடுகளை மேய விட்டு விட்டு மரத்தினடியில் அமர்ந்து கொண்டு இருந்தான். பணியேதும் இன்றி ஓய்வாக அமர்ந்திருப்பது அலுப்பு ஏற்படுத்த, விளையாடும் எண்ணத்துடன் ,"ஓநாய்! ஓநாய் வருகிறது! என் ஆடுகளைக் கொன்று புசிக்க ஓநாய் வருகிறது!" என்று கூக்குரலிட்டான் சிறுவன். இந்த சிறுவனுடைய கூக்குரலைக் கேட்டு அக்கம் பக்கத்து வயல்களில் விளையாடிக் கொண்டிருந்த நபர்கள் சிறுவன் இருக்கும் இடத்தை நோக்கி விரைந்தனர்.

சிறுவன் அருகே அனைவரும் வந்து பார்த்தால், அவன் கவலையின்றி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். மேலும் அங்கு வருகை புரிந்தவர்களைப் பார்த்து இடைவிடாது நகைக்கத் தொடங்கினான். வருகை தந்தவர்கள் இவ்வாறு பொய்யுரைக்க வேண்டாம் என்று சிறுவனைக் கண்டித்துவிட்டு, தங்களது பணிகளைப் பார்க்க சென்றுவிட்டனர்.

சிறிது நேரத்திற்கு பின் மீண்டும் சிறுவன் முன்பு போலவே,"ஓநாய்! ஓநாய் வருகிறது!"என்று கத்தினான். இம்முறையும் சத்தம் கேட்டு ஓடிவந்த மக்கள், அவனது கேலிச் சிரிப்பைக் கண்டு, கோபமுற்று, "இவ்வாறு பொய் கூறாதே! மீறி கூறினால் உண்மையாக இது போன்ற சம்பவம் நேருகையில் உனக்கு யாரும் உதவ முன்வரமாட்டார்கள்." என்று அறிவுறுத்திவிட்டு சென்றனர்.



சிறுவன் மீண்டும் சிறிது நேரத்திற்கு பின் மூன்றாவது முறையாக "ஓநாய் வருகிறது! ஓநாய்!" என்று கூக்குரலிட்டான். அவன் மீண்டும் பொய்யுரைக்கிறான் என்று எண்ணி கிராமமக்கள் யாரும் அவனை காப்பாற்ற முன்வரவில்லை. ஆனால் இம்முறை உண்மையாகவே ஓநாய் வந்து அவன் மேய்த்துக்கொண்டிருந்த ஆடுகளைத் துவம்சம் செய்துவிட்டு சென்றுவிட்டது.


இதனால் மனம் வருந்தி அழுது கொண்டே சிறுவன் மலையில் அமர்ந்துவிட்டான். மாலை வெகுநேரம் ஆகியும் சிறுவன் வீடு திரும்பாததால், அவனின் பெற்றோர் கிராமத்தாரின் உதவியுடன் சிறுவனைத் தேடிக்கொண்டு மலைப்பகுதிக்குச் சென்றனர். அங்கு அழுது கொண்டிருந்த சிறுவனிடம் விவரம் கேட்ட பொழுது, அவன், "உண்மையாகவே ஓநாய் வந்தது; அப்பொழுது நான் உங்களை அழைத்தேன் யாரும் உதவிக்கு வரவில்லை.ஓநாய் ஆடுகளை விரட்டியதால், ஆடுகள் சிதறி நாலாப்பக்கமும் சென்று விட்டன. நான் அழைத்தும் யாரும் உதவ முன்வராதது ஏன்?" என்று கேட்டான்.

அப்பொழுது கிராமத்தை சார்ந்த ஒரு முதியவர், "மக்கள் பொய்யர்களை நம்பமாட்டார்கள். அவர்கள் உண்மையையே கூறினாலும் பொய்யர்களின் பேச்சினை யாரும் உண்மை என கருதமாட்டார்கள்." என்று உரைத்தார்; பின் வாருங்கள் அனைவரும் வீட்டிற்கு செல்லலாம், காலை விடிந்ததும் ஆடுகளைத் தேடலாம் என்று கூறி அனைவரையும் இல்லம் நோக்கி செல்லுமாறு உரைத்தார்; சிறுவன் உட்பட அனைத்து மக்களும் இல்லத்தை நோக்கி செல்லத் தொடங்கினர்.

**நீதி**: பொய்மை நம்பிக்கையை உடைக்க வல்லது, பொய்யர்கள் உண்மையையே கூறினாலும், யாரும் அவர்களை நம்பமாட்டார்கள்!



## நான் செல்ல வழி சொல்லுங்கள் பார்க்கலாம்?



## கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை வட்டமிடுக.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப | ட் | ட | ம் | வி | தை |
| ண | ட | லி | ரு | த் | ல் |
| ம் | யி | கு | ந | ன | நா |
| ட | ரி | ங் | ன் | க | க |
| ம | ணி | ச | து | ர | ம் |
| ச | க் | க | ர | ம் | சி |

பணம் படகு சக்கரம நாகம்

மடம் சங்கு சதுரம் நத்தை

பட்டம் குருவி சன்னல் நகம்


## வண்ணம் தீட்டி மகிழுங்கள்



## எழு வித்தியாசங்களை கண்டுப்பிடியுங்கள் பார்க்கலாம்?



## எண்களை இணைத்து படம் உருவாக்குங்கள் பார்கலாம்!




# வரைபடங்கள்



சிவசங்கா
கொண்டகுப்பம
வேலூா



இ. தனுஷியா
கொண்டகுப்பம
வேலூர்




ஜெ. மாதவி
அன்மருதை
திருவண்ணமலை





வி. சுப்ரஜன
அன்மருதை
திருவண்ணமலை



பி. வரலட்சுமி
கஸ்பபேட்டை
ஈரோடு





அ. மேரி ஜெனிபா
சவேரியார்பாளையம
விழுப்புரம




க. ஆரோக்கிய ஜேட்சன
சவேரியார்பாளையம
விழுப்புரம



சிவசங்கா
கொண்டகுப்பம
வேலூா



சுஜ
கோடம்பாக்கம
சென்னை



ச. வசந்த குமார்
கோடம்பாக்கம
சென்னை

## புதிர்




_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

















Published by **ARUWYE**,
Mazzarello Convent, United India Colony, 1/2, 3rd Main Road,
5th Cross Street, PB560, Kodambakkam, Chennai - 600 024.
Ph:9444156060
Website: www.aruwye.org